# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2264 - 2022 ජනවාරි මස 21 වැනි සිකුරාදා - 2022.01.21

*2264ஆம் இலக்கம் – 2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 21 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | 84 |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | - |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | - | ஏல விற்பனைகள் | 87 |
| ஆய விற்பனையும் குத்தகையும் | - | நானாவித அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**–கலஹா பத்ரவதி தேசிய பிக்குமார் பராமரிப்பு நிலைய நம்பிக்கைப் பொறுப்பு சட்டமூலம் 2022, சனவரி 13 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குரிய குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

*இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.*

*வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை* ***வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.*** *இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்கத் திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.*

*வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2022, பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2022, சனவரி மாதம் 28 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.*

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2022 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

83 - B 082309 - 405 (2022/01)

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 11(5) ஆம் பிரிவின் விதிகளின் கீழ் Hsenid Business Solutions Limited (PB 00245385) ஆனது 2021, திசெம்பர் 21 ஆந் திகதி ஓர்பட்டியல்படுத்தப்பட்ட கம்பனியாக 2021, திசெம்பர் 21 ஆந் திகதி முதல் அமுலுக்கு வருமாறு பிரிவு 11(3) இன் பிரகாரம் Hsenid Business Solutions PLC என அதன் பெயரை மாற்றிக் கொள்வதற்கு தீர்மானிக்க எண்ணுகின்றது.

சபையின் கட்டளைப்படி,

கோப்பரேட் சேர்விசஸ் (பிரைவட்) லிமிட்டட்,

செயலாளர்கள்.

2021,சனவரி 04.

01- 176

---

## ஒன்றிணைத்தல் அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட் ஆகிய நிறுவனம் அக்பார் பார்மசியூடிகல்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல்

சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட் (கம்பனி பதிவிலக்கம் PV 335) ஆகிய நிறுவனம் அக்பார் பார்மசியூடிகல்ஸ் ( பிரைவட்) லிமிட்டட் ( கம்பனிப் பதிவிலக்கம் PV 11321 ) நிறுவனத்துடன் ஒன்றிணைத்தல் விடயம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது என்பதோடு 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244 (1) (அ) பிரிவின் நியதிகளின் கீழ் 2021, திசெம்பர் 30 ஆந் தகதி கம்பனிகள் பதிவாளர் தலைமை அதிபதியினால் ஒன்றிணைப்புச் சான்றிதழ் ஒன்று வழங்கப்பட்டுள்ளது என 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல் வெளியிடப்படுகின்றது.

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(2) ஆம் பிரிவுக்கு ஏற்ப, கீழ் 2021, திசெம்பர் 30 ஆந் திகதி சொல்லப்பட்ட ஒன்றிணைப்பு அமுலுக்கு வருகின்றது மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட ஒன்றிணையும் கம்பனிகள் , கீழ் 2021, திசெம்பர் 30 ஆந் திகதியில் இருந்து சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா லிமிட்டட் என தொடரும்.

நிருவாகி,
சன்ஷய்ன் ஹெல்த்கெயா லங்கா
லிமிட்டட்.

01-178

## கேஷ்வெகன் (பிரைவேட்) லிமிடெட்
## 2007 ஆம் ஆண்டின் கம்பனிகள் சட்டஇல. 07
## பிரிவு 346 (1) இன் கீழான அறிவிப்பு

புரான்டியர் அட்வைசரி ( பிரைவட்) லிமிட்டெட்டின் திரு. மொஹமட் சாஹீர் மொஹமட் அஸ்ரீன் ஆகிய நான், 15/1 டி, ஜோசப் லேன், கொழும்பு 4 , 2022, சனவரி 11 ஆந் திகதியிடப்பட்ட சிறப்புத் தீர்மானத்தின் மூலம் கேஷ்வெகன் ( பிரைவேட்) லிமிடெட் கலைப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளேன் என்பதை இதன் மூலம் அறிவிக்கின்றேன்.

மொஹமட் சாஹீர் மொஹமட் அஸ்ரீன்,

M/S புரான்டியர் அட்வைசரி
(பிரைவேட்) லிமிட்டட்,
இல.15/1 D, ஜோசப் லேன்,
கொழும்பு 4.

01- 182/1

---

## கேஷ்வெகன் (பிரைவேட்) லிமிடெட்
## ( தன்னார்வ Liquidation)
## 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 320(1) ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

2022, சனவரி 11 ஆந் திகதியன்று நிறுவனத்தின் உறுப்பினர்களால் பின்வரும் சிறப்புத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது என்று இதன் மூலம் அறிவித்தல் வழங்கப்படுகின்றது.

“கேஷ்வெகன் ( பிரைவேட்) லிமிடெட் தானாக முன்வந்து செயலிழக்கச் செய்யப்படுவதும், கொழும்பு 4, ஜோசப் லேன், இல. 15/1D இல் உள்ள Frontier Advisory (Pvt ) Ltd இன் திரு. முஹமட் ஸஹீர் முஹமட் அஸ்றீன் Liquidator ஆக நியமிக்கப்படுவதும் இதன் மூலம் தீர்மானிக்கப்படுகிறது.”

டி.எம். எஸ். எஸ். சங்கதாச,

இயக்குநர்,

கேஷ்வெகன் ( பிரைவேட்) லிமிடெட் .

01- 182/2

**இஸாரா எஞ்ஜினியர்ஸ் & லொறி பொடி**
**( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. - PV 21075**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர்: இஸாரா எஞ்ஜினியர்ஸ் & லொறி பொடி ( பிரைவேட்) லிமிட்டட்

பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி: இல. 69/1, கோகந்தர தெற்கு, கோகந்தர
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு ( குடியியல்)
வழக்கு இல.: HC (Civil) /58/2019/ CO
கம்பனி கலைப்பாளர் பெயர்: Gerard Jeevananthan David
முகவரி: Level 3, No.11, Castle Lane, Colombo 04
நியமனத் திகதி: 2020.07.13

1- 184/1

---

**இஸாரா எஞ்ஜினியர்ஸ் & லொறி பொடி**
**( பிரைவேட்) லிமிட்டட்**
**கம்பனியின் பதிவு இல. - PV 21075**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270(ஏ)(இ)(ஈ) ஆம் பிரிவின் கீழான கலைப்பு உத்தரவு பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர்: இஸாரா எஞ்ஜினியர்ஸ் & லொறி பொடி ( பிரைவேட்) லிமிட்டட்

பதிவு செய்யப்பட்ட
அலுவலக முகவரி: இல. 69/1, கோகந்தர தெற்கு, கோகந்தர
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு ( குடியியல்)
வழக்கு இல.: HC (Civil) /58/2019/ CO
நீதிமன்ற கட்டளைத் திகதி: 2020.07.13
கோரிக்கை தாக்கல் செய்த திகதி:2019.07.26
கம்பனி கலைப்பாளர் பெயர்: Gerard Jeevananthan David
முகவரி: Level 03, No.11, Castle Lane, Colombo 04

1- 184/2

---

**கம்பனியின் பெயர் மாற்றல் அறிவித்தல்**

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் வரும் கம்பனியின் பெயரானது 2021, திசெம்பர் 21 ஆந் திகதியிலிருந்து மாற்றம் பெற்றுள்ளது.-

கம்பனியின் முன்னைய பெயர்: சொஃப்ட் சர்வ் சொலுஷன்ஸ் ( பிரைவேட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பிவீ 76664
பதிவு அலுவலகம்: இல. 361/7, மஹாவத்த வீதி, ராஜகிரிய , மிரிஹான, நுகேகொடை
கம்பனியின் புதிய பெயர்: சொப்ட்சர்வ் சொலுஷன்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பினான்சியல் அன்ட் பிசினஸ் அசோசியேட்
(பிரைவேட்) லிமிட்டெட்,
கம்பனிச் செயலாளர்கள்.

01-186

---

**அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்**

இலங்கைச் சனநாயக சோசலிசகக் குடியரசின் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, மெதபத்துவ, கம்பஹா பிரதேச செயலகப் பிரிவின் இலக்கம் 140, வெதகெதர இஹல இம்புல்கொட, இம்புல்கொட என்ற முகவரியில் வசிக்கும் பண்டுவாவல கங்காணமலாகே விக்கும் சர்தாவர்தன 630030595V ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசுவும், சட்டத்தரணியுமான கே. எஸ். விஜேசேகர என்பவரினால் 2013.05.22 ஆந் திகதியன்று எழுதி அத்தாட்சிப்படுத்திய 1274 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தின் மூலம் இம்புல்கொட, இஹல இம்புல்கொட, வெதகெதர, இலக்கம் 140 என்ற முகவரியில் வசிக்கும் பண்டுவாவல கங்காணமலாகே அத்துல சர்தாவர்தன என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவமானது 2021.12.21 ஆந் திகதி முதல் இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

பண்டுவாவல கங்காணமலாகே
விக்கும் சர்தாவர்தன.

01-166

---

**விசேட அற்றோணித் தத்துவப் பத்திரத்தை இரத்துச் செய்தல்**

இத்தால் சகலருமறிக, இலக்கம் 54/1, நிக்கெபி வீதி, தெஹிவளையைச் சேர்ந்த அப்துல் நாஸிர் முஸ்தாக் அஹ்மட் மற்றும் ஏய் ஸீனத் ஸரீக்கா சுஹய்மீன் ஆகிய நாங்கள், விசேட அற்றோணித் தத்துவப் பத்திரங்களான இல. 209, 2014, சித்திரை மாதம் 16 ஆந் திகதியிடப்பட்ட மற்றும் இல.324, 2016, செத்தெம்பர் 9 ஆந் திகதியிடப்பட்டு நொத்தாரிசு G.M.M.L.M.சித்திக், கொழும்பு பிரசித்த நொத்தாரிசால் இலக்கம் 244/3, ஹில் ஸ்ரீட், தெஹிவளையைச் சேர்ந்த

முஹம்மட் நஸீம் முஹம்மட் பாஸில் என்பவருக்கு எழுதப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப்பத்திரத்தை இரத்துச் செய்து முடிவுறுத்துகிறோம்.

அப்துல் நாஸிர் முஸ்தாக் அஹ்மட்
ஞய் ஸீனத் ஸரீக்கா சுஹய்மீன்.

01- 177

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கெஸ்பேவ, பண்டாரகம வீதி, வளவ்வத்த, இல. 228/11 இல் வசிக்கும் அளுத்கம பதுகே சிந்தக ஜயநந்த ( தே.அ.அ.இல. 823452551V) ஆகிய நான், களுத்துறை பகிரங்க நொத்தாரிசு திரு. ஏ. பெத்மகேயினால் உறுதி செய்யப்பட்ட இல. 4463 மற்றும் 2013, ஓகத்து மாதம் 06 ஆந் திகதிய விசேட அற்றோணி அதிகாரப்பத்திரம் மூலம் கெஸ்பேவ, பண்டாரகம வீதி, வளவ்வத்த, இல. 228/ 11 இல் வசிக்கும் கம்மெத்தே கெதர அதபத்துஹேரத் முதியன்சேலாகே நிஷாந்த அநுர பண்டார ஹேரத் ( தே.அ.அ.இல. 722572521V) என்பவருக்கு வழங்கப்பட்ட அற்றோணி அதிகாரத்தை 2022.01.06 ஆந் திகதி முதல் இரத்துச் செய்வதாகவும் அவரால் இதன் பின்னர் மேற்கொள்ளப்படும் எந்த செயற்பாடுகளுக்கும் நான் பொறுப்பாக மாட்டேன் எனவும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் சகலருக்கும் இத்தால் அறிவித்துக் கொள்கின்றேன்.

அளுத்கம பதுகே சிந்தக ஜயநந்த .

01-187

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, குமாரதுங்க மாவத்தை, இல. 380 மற்றும் தற்போது கனடா, R 3 T6C7,Winnipeg Manitoba, Way ield Drive, 227 ஐச் சேர்ந்த சமிந்த வீரகோன் (தே.அ.அ.இல. 753541101V) இன் அற்றோணி அதிகார உரிமையாளரான மாத்தறை, குமாரதுங்க மாவத்தை, இல. 380, புத்தி நிஷார வீரக்கூன் ( தே.அ.அ.இல. 868662719V) இற்கு, பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தென் மாகாண வலய அலுவலகம் (காலி) இனால் எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணி அதிகாரம் வழங்கப்பட்ட தினப் புத்தகம் 766, போலியோ 82, வொல்யூம் 112 இல் பதிவு செய்யப்பட்ட கனடா, மனிடோபா மாகாண பகிரங்க நொத்தாரிசு ஹசக்க யூ.ரத்னமாலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்வதாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தில் பொது அற்றோணி அதிகாரத்தின் மூலம் சொல்லப்பட்ட சமிந்த வீரகோனின் சார்பாக சொல்லப்பட்ட புத்தி நிஷார வீரகோனினால் மேற்கொள்ளப்படும் எந்த விடயத்திற்கும் சமிந்த வீரகோனினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது. சமிந்த வீரகோனினால் தரப்பட்ட அறிவுறுத்தல்களின் கீழ் சட்டத்தரணி புஷ்பகாந்தி மஹகமகேவினால் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது.

01-210

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

மாத்தறை, குமாரதுங்க மாவத்தை, இல. 380 மற்றும் தற்போது கனடா, R 3 T4M7,Winnipeg Manitoba, லேக் விலேஜ் ரோட், 47 ஐச் சேர்ந்த சந்துன் வீரகோன் (தே.அ.அ.இல. 782942247V) இன் அற்றோணி அதிகார உரிமையாளரான மாத்தறை, குமாரதுங்க மாவத்தை, இல. 380, புத்தி நிஷார வீரக்கூன் ( தே.அ.அ.இல. 868662719V) இற்கு, பதிவாளர் நாயகத் திணைக்களத்தின் தென் மாகாண வலய அலுவலகம் (காலி) இனால் எழுத்து மூல அதிகாரம் மற்றும் அற்றோணி அதிகாரம் வழங்கப்பட்ட தினப் புத்தகம் 767, போலியோ 82, வொல்யூம் 112 இல் பதிவு செய்யப்பட்ட கனடா, மனிடோபா மாகாண பகிரங்க நொத்தாரிசு ஹசக்க யூ.ரத்னமாலவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட அற்றோணி அதிகாரத்தை இரத்துச் செய்வதாக, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் மக்களுக்கும் இத்தால் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது. எதிர்காலத்தல் பொது அற்றோணி அதிகாரத்தின் மூலம் சொல்லப்பட்ட சந்துன் வீரகோனின் சார்பாக சொல்லப்பட்ட புத்தி நிஷார வீரகோனினால் மேற்கொள்ளப்படும் எந்த விடயத்திற்கும் அத்துடன் சந்துன் வீரகோனினால் பொறுப்புக் கூறப்பட மாட்டாது. சந்துன் வீரகோனினால் தரப்பட்ட அறிவுறுத்தல்களின் கீழ் சட்டத்தரணி புஷ்பகாந்தி மஹகமகேவினால் இந்த அறிவித்தல் பிரசுரிக்கப்படுகிறது.

01-211

---

## அற்றோணித் தத்துவத்தினை இரத்துச் செய்தல்

நீர்கொழும்பு, ஏத்துக்காள, பாடசாலை ஒழுங்கை, இலக்கம் 03 இல் வசிக்கும் மாலிமகே பீட்டர் எரிக் பெர்னாந்து (தே.அ.அ.இல. 603212134V) ஆகிய நான், பிரசித்த நொத்தாரிசு அன்ரூ திசேரா அவர்களினால் 1990, சனவரி 24 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 649 ஆம் இலக்கமுடையதும், நீர்கொழும்பு, கட்டுவாபிட்டிய வீதி, இல. 30/1 இல் வசிக்கும் மாலிமகே அன்தனி லூசியன் பேர்ணாண்டு ( தே.அ.அ.இல. 471043770V) என்பவருக்கு வழங்கப்பட்டதுமான அற்றோணித் தத்துவமானது இரத்துச் செய்து இல்லாதொழிக்கப்படுகின்றதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறிவித்துக்கொள்கின்றேன்.

மாலிமகே பீட்டர் எரிக்
பெர்னாந்து.

1-212

# ஏல விற்பனைகள்

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

எச். ஆர். கே. டபிள்யூ. கே. குமார மற்றும் எச். ஆர். கே. விபுலசேன
கணக்கு இலக்கம் : 0060 5000 9538

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.10.29 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.11.13 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.11.13ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எழுபத்தி இரண்டு இலட்சத்து எழுபத்து மூவாயிரத்து முந்நூற்று பத்து ரூபா அறுபத்தொன்பது சதம் (ரூபா 1,72,73,310.69) 2020, செத்தெம்பர் 11 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் ரூபா (ரூபா 1,55,00,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு பதின் மூன்று தசம் ஐந்து வீதம் (13.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 354 மற்றும் 1575 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.02.15 ஆந் திகதி மு.ப.11.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.*

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

*ஊவா மாகாணம், மொனராகலை மாவட்டம், புத்தள கோரளே கதிர்காமம் பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் கந்தசுரிந்து கம கிராம அலுவலர் பிரிவின் தெட்டகமுவ கிராமத்தில் அமைந்த "தெட்டகமுவே ஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். கே. விக்னராஜா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 31 ஆந் திகதியிடப்பட்ட இல. 2015-332 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: வீதி மற்றும் EPTP 25 லொட் 679 ; கிழக்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு : EPTP 25 லொட் 661 மற்றும் மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் (0ஏ.3றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 2015-332 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.*

*கூறப்பட்ட லொட் A கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்.*

*கூறப்பட்ட தெட்டகமுவ கிராமத்தில் அமைந்த "தெட்டகமுவே ஹேன" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. பீ. அத்தநாயக்க என்பவரால் தயாரிக்கப்பட்ட 2005, செத்தெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட இல. M 805 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: வீதி மற்றும் EPTP 25 லொட் 679; கிழக்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ; தெற்கு: EPTP 25 லொட் 661 மற்றும் மேற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் மூன்று றூட்கள் (0ஏ.3றூ.0பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. M 805 எனும் வரைபடத்திற்கு அமைவாக மொனராகலை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் LDO/N06/115 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-151

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்*

ஆர். எம். ஏ. எஸ். ஆர். கே. ரத்நாயக்க
கணக்கு இலக்கம் : 1063 5494 6874

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.09.24 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2020.10.29 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette)*

2020.10.19ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான ஒரு கோடியே எண்பத்தி ஐந்து இலட்சத்து மூவாயிரத்து இருநூற்று ஐம்பத்தி ஏழு ரூபா பதினான்கு சதம் (ரூபா 1,85,03,257.14) 2020, ஓகத்து 28 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச் செலுத்தித் தீர்க்கும் திகதி வரை ஒரு கோடியே அறுபத்தி மூன்று இலட்சத்து முப்பதாயிரம் ரூபா (ரூபா 1,63,30,000.00) இத்துடன் மேலதிக வட்டியாக ஆண்டொன்றிற்கு பதினாறு தசம் ஐந்து வீதம் (16.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இல. 3741 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக 2022.02.21 ஆந் திகதி மு.ப. 11.00 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே பல்லே பத்துவின் கடுவலை மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் குமாரகேவத்த கிராம அலுவலர் பிரிவின் தலங்கமை கிராமத்தில் அமைந்த லேக் வீதி, வரிமதிப்பீட்டு இல. 43/1 ஐ ஏற்ற "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ரீ. டீ. கே. ஆர். பீ. பத்தேகம என்பவரால் தயாரிக்கப்பட்ட 2017, செத்தெம்பர் 28ஆந் திகதியிடப்பட்ட இல. 6600 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1A எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : டைனகொரோ (பிரைவெற்) லிமிட்டெட் மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் சொத்து மற்றும் இல. 1278 எனும் வரைபடத்தின் லொட் 2; கிழக்கு: இல. 1278 எனும் வரைபடத்தின் லொட் 2 மற்றும் தனியார் வீதி ; தெற்கு: தனியார் வீதி இல. 1278 எனும் வரைபடத்தின் லொட் 9 மற்றும் எஃப். பெர்ணாண்டோ உரிமம் கோரும் சொத்து மற்றும் மேற்கிற்கு : எஃப். பெர்ணாண்டோ மற்றும் டைனகொரோ (பிரைவெற்) லிமிட்டெட் மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் சொத்து, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 6600 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட 1A கீழே விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹோவாகம் கோரளே பல்லே பத்துவின் கடுவலை மா நகர சபை எல்லைகளுக்குள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் மற்றும் குமாரகேவத்த கிராம அலுவலர் பிரிவின் தலங்கமை கிராமத்தில் அமைந்த லேக் வீதி, வரிமதிப்பீட்டு இல. 43/1 ஐ ஏற்ற "தெல்காஹாவத்த" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ ஹெட்டிகே என்பவரால் தயாரிக்கப்பட்ட 1991, ஓகத்து 20 ஆந் திகதியிடப்பட்ட இல. 1278 எனும் வரைபடத்தில் காட்டப்பட்ட அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு : எச். ஜீ. பீரிஸ் என்பவர் உரிமம் கோரும் காணி ; கிழக்கு : இங்கு லொட்கள் 2 மற்றும் 8 ; தெற்கு: லொட் 8 மற்றும் (20 அடி அகல வீதி) மற்றும் மேற்கு : லொட் 9 மற்றும் ஃபென்சினா பெர்ணாண்டோ உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் முப்பத்தி ஐந்து பேர்ச் (0ஏ. 0றூ. 35பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் மற்றும் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1278 எனும் வரைபடத்திற்கு அமைவாக ஹோமாகமை காணிப் பதிவகத்தில் பரிமாணம்/ பக்கம் B 1093/63 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இல. 1278 எனும் கூறப்பட்ட வரைபடத்தில் லொட்கள் 8 மற்றும் 9 என குறிப்பிடப்பட்ட வீதிக்கான ஒதுக்கத்தின் மீதும் அதன் ஊடாகவும் பிரவேசிப்பதற்கான மார்க்க உரிமைகளுடனானது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-152

---

## சம்பத் வங்கி பீஎல்சீ

(முன்பு சம்பத் வங்கி லிமிடெட் என அழைக்கப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 09 ஆம் பிரிவின் கீழான விற்பனை அறிவித்தல்

ரீ .எம். பீ. டி சில்வா அன்ட் சன்ஸ் கம்பனி ( பிறைவெற்) லிமிட்டெட்

கணக்கு இலக்கம் : 0198 1000 1340

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 04 ஆம் பிரிவின் கீழ் சம்பத் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையினால் 2020.12.16 ஆந் திகதி நடைபெற்ற கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு அமைவாக 2021.01.08 ஆந் திகதிய இலங்கை வர்த்தமானியிலும் (Gazette) 2020.12.28ஆந் திகதிய "திவயின" (Divaina), "ஐலண்ட்" (Island), "தினக்குரல்" (Thinakkural) ஆகிய பத்திரிகைகளில் வெளியிடப்பட்ட அறிவித்தல்களுக்கிணங்க நிலுவை முதலான முப்பத்தி இரண்டு கோடியே நாற்பத்தி ஐந்து இலட்சத்து எழுபத்தைந்தாயிரத்து இருநூற்று தொண்ணூறு ரூபா ஐம்பத்தி ஒன்பது சதம் (ரூபா 32,45,75,290.59) 2020, திசெம்பர் 08 ஆந் திகதி முதல் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகையைச்

செலுத்தித் தீர்க்கும் திகதி வரை இருபத்தி ஐந்து கோடியே ஐம்பது இலட்சம் (ரூபா 25,50,00,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு நான்கு தசம் ஐந்து வீதம் (4.5%) மேலும் இரண்டு கோடியே ஐம்பத்தொரு இலட்சத்து பதின் ஐந்தாயிரம் ரூபா (ரூபா 2,51,15,000.00) கட்டணத்திற்காக at the rate of Average Weighted Prime Lending Rate + வருடாந்தம் நூற்றுக்கு இரண்டு தசம் ஐந்து வீதம் (2.5%) வருமதியாகவுள்ள வட்டியுடன், விளம்பரச் செலவுகள், ஏனைய செலவுகள், ஏதேனும் கட்டணங்கள் செலுத்தப்பட்டிருப்பின் அவற்றையும் கழித்து அறவிட்டுக் கொள்வதற்கு கூறப்பட்ட ஈட்டு முறி இலக்கங்கள் 52, 54, 3125 மற்றும் 3610 இன் மீது பிணையாக வைக்கப்பட்டுள்ள சொத்துக்கள், நிலமனைகளை கொழும்பு உத்தரவுபெற்ற ஏலதாரர்களான பீ. கே. ஈ. சேனாபத்தி என்பவர்கள் மூலமாக முதலாவது ஆதன அட்டவணையில் உள்ள காணியை 2022.02.17ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கும் இரண்டாவது ஆதன அட்டவணையில் உள்ள காணியை 2022.02.17 ஆந் திகதி பி.ப. 2.30 மணி முதல் அதே இடத்தில் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என இத்தால் தீர்மானிக்கின்றது.

### மேற்குறிப்பீடு செய்யப்பட்ட அட்டவணை

1. மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், வத்தளை பிரதேச செயலாளர் பிரிவின் ஹேகித்த இல. 5 கிராம அலுவலர் பிரிவின் அலுத்குரு கோரளே ராகம் பத்துவின் வத்தளை - மாபோல மாநகர சபை எல்லைகளுக்குள் வத்தளையில் அமைந்த எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 9/1, 9/5, 9/6 மற்றும் 9/7 ஐ ஏற்ற "கித்துல்காஹாவத்த மற்றும் கொடலியத்த" எனும் "சுதுவீ கும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் பீ. வீ. விஜயரத்ன என்பவரால் தயாரிக்கப் பட்ட 2016, சனவரி 24 ஆந் திகதியிடப்பட்ட இல. 1861 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: ஸ்ட்டீவன் சில்வா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் டபிள்யூ. சீ. எம். பெர்ணாண்டோ என்பவர் உரிமை கோரும் காணி ; கிழக்கு: மன் கான் மற்றும் அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி, எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 27 ஐ ஏற்ற வளவுகள் ; தெற்கு: அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் எவரிவத்த வீதி ; மற்றும் மேற்கு : மன் கான் மற்றும் தர்ஷன டி சில்வா என்பவர் உரிமம் கோரும் காணி, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் நான்கு தசம் சைபர் ஐந்து பேர்ச் (0ஏ.1றூ.4.05பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1861 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட காணி கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும் :

மேற்கூறப்பட்ட வத்தளையில் அமைந்த எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 9/1, 9/5, 9/6 மற்றும் 9/7 ஐ ஏற்ற "கித்துல்காஹாவத்த மற்றும் கொடலியத்த" எனும் "சுதுவீ கும்புர" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டீ. என். ரீ. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, மே 25 ஆந் திகதியிடப்பட்ட இல. 1458 எனும் வரைபடத்தில் அனைத்தும் பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் B எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன: வடக்கு: ஸ்ட்டீவன் சில்வா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் டபிள்யூ. சீ. எம். பெர்ணாண்டோ என்பவர் உரிமை கோரும் காணி ; கிழக்கு: எவரிவத்த வீதி வரிமதிப்பீட்டு இல. 27 ஐ ஏற்ற வளவுகள் மற்றும் அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி ; தெற்கு: அலோசியஸ் பெர்ணாண்டோ என்பவர் உரிமம் கோரும் காணி மற்றும் எவரிவத்த வீதி மற்றும் மேற்கு : ஸ்ட்டீவன் சில்வா மற்றும் ஏனையோர் உரிமம் கோரும் காணி மற்றும் லொட் A, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் ஒரு றூட் மற்றும் நான்கு தசம் சைபர் ஐந்து பேர்ச் (0ஏ.1றூ.4.05பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1458 எனும் வரைபடத்திற்கு அமைவாக கம்பாஹா காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் L 260/18 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இல. 52 எனும் ஈட்டு முறியின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தேவமெதி ஹத்பத்துவையின் வல்கம்பத்து கோரளே வாரியபொல பிரதேச சபை எல்லைகளுக்குள் மற்றும் பமுனகொட்டுவை பிரதேச செயலாளர் பிரிவின் ஹேன் கெதர இல. 1225 கிராம அலுவலர் பிரிவின் தேவமெதி ஹத்பத்துவையின் வல்கம்பத்து கோரளே கொலமுனே மற்றும் நாகனே, படலகம, மடவலகெதர கிராமங்களில் அமைந்த "மாயா எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. கே. பெரேரா என்பவரால் தயாரிக்கப்பட்ட 2015, ஒற்றோபர் 29 ஆந் திகதியிடப்பட்ட இல. 1789 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் A என குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எஸ்டேட் வீதி ; கிழக்கு: பமுனா கொட்டுவ முதல் களுகமுவ வரை பிரதான வீதி ; தெற்கு : கிராமவாசிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி, உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட வரைபட இல. 154/93 இன் லொட் 2 மற்றும் கிராமவாசிகளுக்காக ஒதுக்கப்பட்ட மற்றும் உரிமம் கோரும் மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி ; மற்றும் மேற்கு : கிராம வாசிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி மற்றும் மாஹா ராஜா என்பவர் உரிமம் கோரும் மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு ஏக்கர் மற்றும் இருபத்தி ஐந்து தசம் ஆறு பேர்ச் (8ஏ.0றூ.25.6பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன்

அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 1789 எனும் வரைபடத்திற்கு அமைவானதாகும்.

கூறப்பட்ட காணி கீழே நேர்த்தியாக விபரிக்கப்பட்ட காணியின் மீள் அளவீடாகும்:

கூறப்பட்ட மடவலகெதர கிராமத்தில் அமைந்த "மாயா எஸ்டேட்" என்றழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. சீ. எஸ். எம். அபேசேக்கர என்பவரால் தயாரிக்கப்பட்ட 1993, செத்தெம்பர் 17 ஆந் திகதியிடப்பட்ட இல. 154/93 எனும் வரைபடத்தில் அனைத்து பிரித்து எல்லைகள் நிர்ணயிக்கப்பட்டு லொட் 1 எனக் குறிப்பிடப்பட்ட காணியின் எல்லைகளாவன - வடக்கு: எஸ்ட்டேட் வீதி ; கிழக்கு: பமுனாகொட்டுவ முதல் களுகமுவ வரை பிரதான வீதி ; தெற்கு : கிராமவாசிகளுக்கு ஒதுக்கப்பட்ட மாயா எஸ்ட்டேட்டின் ஒரு பகுதி, வரைபட இல. 154/93 இன் லொட் 2 மற்றும் கிராமவாசிகளுக்காக ஒதுக்கப்பட்ட மாயா எஸ்டேட்டின் ஒரு பகுதி ; மற்றும் மேற்கு : மாயா எஸ்ட்டேட்டின் லொட் A மற்றும் B, ஆகிய இவ் எல்லைகளுக்குள் அமைந்த காணியின் விஸ்தீரணம் எட்டு ஏக்கர் ஒரு றூட் மற்றும் ஐந்து பேர்ச் (8ஏ.1றூ.5பே.) விஸ்தீரணத்தைக் கொண்ட காணியுடன் அங்கு அமைந்த அனைத்தும், நிலம், மரங்கள், பயிர்கள், கட்டடங்களுடன் அதன்கண் அமைந்த அனைத்துமுடன் கூறப்பட்ட இல. 154/ 93 எனும் வரைபடத்திற்கு அமைவாக குருநாகல் காணிப் பதிவகத்தில் பரிமாணம்/பக்கம் Q 23/114 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

(இலக்கங்கள் 54, 3125 மற்றும் 3610 எனும் ஈட்டு முறிகளின் மீது பிணையாக அடகு வைக்கப்பட்டுள்ளது.)

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

கம்பனிச் செயலாளர்.

1-153

---

## செலான் வங்கி பீ.எல்.சீ. - கட்டுநேரியக் கிளை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான பகிரங்க ஏல விற்பனை

### பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏலவிற்பனை

கடுநேரியவில் வசிக்கும் வர்ணகுலசூரிய லெனிடா சுஜீவா பிரனாந்து என்பவர் "கடப்பாட்டாளராகவும்/ ஈடுவைத்தவராகவும்" என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார். ஆதலால், செலான் வங்கி பீஎல்சீ யின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு W.S.N. பெர்னான்டோ என்பவரால் அனைத்தையும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2015.04.24 ஆந் திகதிய 1473 ஆம் இலக்க ஈட்டு முறி 2015.06.24 ஆந் திகதிய 1499 ஆம் இலக்க ஈட்டு முறி மற்றும் 2015.11.05 ஆந் திகதிய 1576 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் கீழ் செலான் வங்கி பீஎல்சீ யில் அடகு வைக்கப்பட்ட இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் அதன்சுற்றுச்சூழலானது.

2021 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 21 ஆந் திகதியன்று மு.ப.10.00 மணிக்கு செலான் வங்கி பீ எல் சீ யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரத்திற்குட்பட்டு கடுநேரிய செலான் வங்கி பீ.எல்.சீ. யின் கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கொவிட் 19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழிகாட்டுதல்களுக்கும் அமையவே நடாத்தப்படும்.

### அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், மாரவில பதிவுப் பிரிவுக்குள், வடக்கு பிடிகல் கோரளை மத்திய பிரதேசத்தில் நாத்தாண்டிய பிரதேச சபை எல்லைக்குட்பட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவிற்குள் இஹல கடுநேரிய கிராமத்தில் அமைந்துள்ள கினி கெஸ்ம என அழைக்கப்படும் காணிக்கு உத்தரவுபெற்ற நில அளவையாளர் W.I.H. பெர்நான்டோ என்பவரினால் 2015.03.13 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 12608 ஆம் இலக்க நில வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள காணியானது லொட் 02 என அடையாளப்படுத்தப்பட்டு பிரித்தொதுக்கப்பட்ட காணித்துண்டின் பரப்பளவானது ஒரு றூட் பத்து பேர்ச் (0ஏ.01றூ. 10பே.) கொண்ட விசாலமான கட்டடங்கள், மரங்கள், பயிர்செய்கைகள் மற்றும் அதில் அமைந்துள்ள அனைத்துடன் ஆகும்.

**காணிக்குச் செல்லும் வழி** : கடுநேரிய செலான் வங்கி பீ.எல்.சீ. யின் வளாகத்தில் இருந்து மாரவிலை நோக்கி 1.3 கி.மீற்றர் தூரம் பன்கட சந்தி வரை சென்று வலது பக்கத்தில் உள்ள புனித ஜுட் மாவத்தை ஊடாக 1.8 கி.மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள பிரதேச சபை வீதியில் 100 மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள வீதியில் 150 மீற்றர் தூரம் வரை சென்ற பிறகு இடது பக்கத்தில் அமைவாக இவ் விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு**: 2021.11.12 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானி மற்றும் 2021. 10 .22 ஆந் திகதிய "டெய்லி மிரர்" மற்றும் "அத" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளிலும் வெளியிடப்பட்டுள்ளது.

**கட்டணங்கள் செலுத்தும் விதம்**.- உத்தேசக் கொள்வன வாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்.

(1) கொள்வனவு விலையில் பத்து வீதம் 10% (பத்து வீதம்);
(2) உள்ளூராட்சி மன்ற வரி 1% (ஒரு வீதம்) ;
(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5% ;
(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்தலுக்கான நொத்தாரிசுக் கட்டணம் 2,500.00 ரூபா ;
(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம்;
(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் ;

*மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினாலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற்குறிப்பிடப்பட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னால் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.*

*உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக் கொள்ள கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகளிடம் விசாரணைகளை மேற்கொள்ளவும்.*

"உதவி பொது முகாமையாளர், (சட்டம்), 14 ஆவது மாடி, செலான் வங்கி பீ.எல்.சீ., இல.90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011- 2456485, 011- 2456479 மற்றும் 011-2456473.

மேலேயுள்ள ஏல விற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிய சகல அதிகாரங்களும் வங்கிக்குண்டு.

சந்திமா பிரியதர்ஷினி கமகே,
நீதிமன்ற ஆணையாளர், விலை மதிப்பீட்டாளர்
மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர் .

இல. 9-I ஹைலெவல் வீதி , சர்வோதய மாவத்தை,
பனாகொட, ஹோமாகம.
தொலைபேசி: 071-4318252, 011- 2173282.

1- 213

---

**செலான் வங்கி பீஎல்சீ - மாத்தறை கடைவீதிக் கிளை**

பெறுமதிமிக்க இடம் ஒன்றின் பிரசித்த ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9ஆம் பிரிவின் கீழான ஏல விற்பனை

கம்புருகமுவயில் வசிக்கும் விதானகம்மச்சி கவிது பிரிபுன் மற்றும் விதானகம்மச்சி கசுனி தாரக ஆகிய இருவரும் "கடப்பாடுடையவர்களாகவும்/ ஈடுவைத்தவர்களாகவும்" என்ற வகையில் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால், செலான் வங்கி பீஎல்சீயின் சார்பாக பிரசித்த நொத்தாரிசு W.O.S. விதானந்தவினால் அத்தாட்சிப்படுதப்பட்ட 2017.02.08 ஆந் திகதி நாட் புத்தகத்தின் இலக்கம் 17/ 189 இன் கீழ் மற்றும் நாள் புத்தகத்தின் இலக்கம் 17/191 இன் கீழ் தலைப்புச் சான்றிதழ் இலக்கம் 00170000357 இன் கீழ் பதிவு செய்யப்பட்டு அடகு வைக்கப்பட்ட பத்திரம் மற்றும் பிரசித்த நொத்தாரிசு W.O.S. விதானந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.08.13 ஆந் திகதிய அடமானப் பத்திர இலக்கம் 1645 மற்றும் 1647 மூலம் செலான் வங்கி பீஎல்சீ யில் அடகு வைக்கப்பட்ட இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள காணி மற்றும் தன் சுற்றுச் சூழலானது.

2022ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 22 ஆந் திகதி கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களின் பிரகாரம் செலான் வங்கி பீ.எல்.சீ.யினால் எனக்கு வழங்கப்பட்ட அதிகாரங்களிற்குட்பட்டு மாத்தறை கடைவீதி செலான் வங்கி பீ.எல்.சீ. யின் கிளை வளாகத்தில் என் மூலமாக பகிரங்க ஏல விற்பனையில் விற்கப்படும்.

மேற்படி ஏல விற்பனையானது சுகாதார அமைச்சின் கோவிட்-19 சம்பந்தமாக விடுக்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கும் வழி காட்டலுக்கும் அமையவே நடாத்தப்படும்.

**1 ஆவது ஏல விற்பனை -. மு.ப. 11.00 மணிக்கு**

**அட்டவணை**

தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளே, வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் மேற்கு கம்புறுகமுவ கிராம அலுவலர் பிரிவிற்குள் கம்புறுகமுவ கிராமத்தில் உள்ள வதுனய்தேலய்வத்த என்று அழைக்கப்படும் காணி மாத்தறையிலுள்ள உத்தரவுபெற்ற நில அளவையாளரால் தயாரிக்கப்பட்ட திட்டத்தில் சித்தரிக்கப்பட்டுள்ள இலக்கம் 820071 இன் கீழ் வலய இலக்கம் 01 இன் துண்டு இலக்கம் 0127 என அடையாளமிடப்பட்ட காணியின் பரப்பளவு பூச்சியம் தசம் ஒன்று ஒன்று நான்கு மூன்று ஹெக்டயார் (0.1143ஹெக்.) விசாலமான காணி.

இந்தக் காணித்துண்டை உத்தரவுபெற்ற நில அளவையாளரான டபிள்யு. ஆர். குலரத்ன என்பவரினால் மீள் அளவீடு செய்யப்பட்டு 2016.10.24 ஆந் திகதியிடப்பட்டு தயாரிக்கப்பட்ட 2258 ஆம் இலக்க நில வரைபடத்தில் உள்ள காணியின் பரப்பளவானது ஒருறாட் ஐந்து தசம் இரண்டு பூச்சியம் பேர்ச் (0ஏ. 1றூ.5.20பே.) அல்லது 0.1143 ஹெக்டயார் உடனான லொட் 127 என அடையாளமிடப்பட்ட விசாலமான காணி.

பிரசித்த நொத்தாரிசு W.O.S. விதானந்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2017.02.18 ஆந் திகதிய நாள் புத்தகத்தின் இலக்கம் 17/ 189 இன் கீழ் மற்றும் நாள் புத்தகத்தின் இலக்கம் 17/191 இன் கீழ் தலைப்புச் சான்றிதழ் இலக்கம் 00170000357 இன் கீழ் பதிவு செய்யப்பட்டு அடகு வைக்கப்பட்ட காணி.

**காணிக்குப் பிரவேசிக்கும் வழி.**-. மாத்தறை நகரத்தில் இருந்து மாத்தறை கொழும்பு வீதி ஊடாக 6 கி.மீற்றர் கம்புருகமுவ சந்தி வரை சென்று இன்னும் 200 மீற்றர் காலியை நோக்கி சென்று பிறகு வலது பக்கத்தில் உள்ள கமகேகொடவத்த வீதி ஊடாக 50 மீற்றர் தூரம் வரை சென்று இடது பக்கத்தில் உள்ள 12 அடி விசாலமான வீதியில் பயணித்து பிறகு அந்த வீதியில் கடைசி காணியில் இவ் விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.

***2 ஆவது ஏல விற்பனை -. மு.ப. 11.15 மணிக்கு***

***அட்டவணை***

*தென் மாகாணம், மாத்தறை மாவட்டத்தில், வெலிகம் கோரளே, வெலிகம பிரதேச செயலாளர் பிரிவில் மற்றும் பிரதேச சபை எல்லைக்குள் தல்ஹரப வடக்கு கிராம அலுவலர் பிரிவிற்குள் தல்ஹரப கிராமத்தில் உள்ள தெபிலியாஹேனவத்த அருகில் லொட் பீ மற்றும் சீ லொட் 01 ( உத்தரவுபெற்ற நில அளவையாளரான ஏ. டபிள்யூ. பி. குணதிலக என்பவரினால் அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 737 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) மற்றும் லொட் 02 (உத்தரவுபெற்ற நில அளவையாளரான ஏ. டபிள்யூ. பி. குணதிலக என்பவரினால் அளவீடு செய்யப்பட்டு தயாரிக்கப்பட்ட 2012.01.13 ஆந் திகதி இலக்கம் 737 வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள) என்றழைக்கப்படும் காணியின் பரப்பளவானது மூன்று றூட் பதினெட்டு தசம் ஏழு ஒன்று பேர்ச் (0ஏ.3றூ.18.71பே.) விசாலமான காணி.*

*பிரசித்த நொத்தாரிசு* W.O.S. *விதானந்தவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2018.08.13 ஆந் திகதிய 1645 மற்றும் 1647 ஆம் இலக்க அடமானப் பத்திரத்தின் கீழ் அடகு வைக்கப்பட்டுள்ள சொத்து.*

***காணிக்குப் பிரவேசிக்கும் வழி.*-.** *மாத்தறை பஸ் நிறுத்துமிடத்திலிருந்து காலியை நோக்கி 8.4 கி.மீ. சென்று பிறகு வலது பக்கத்தில் உள்ள காணியில் இவ் விடயத்திற்கான காணி அமைந்துள்ளது.*

***தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.*-** *2021.11.12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையிலும், 2021.10.08 ஆந் திகதிய "டெய்லி மிரர்", "அத" மற்றும் "தினக்குரல்" ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

***கட்டணங்கள் செலுத்தும் விதம்*** .-*உத்தேசக் கொள்வனவாளர் ஏல முடிவில் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்குச் செலுத்த வேண்டும்.*-

*(1) கொள்வனவு விலையின் 10%;*
*(2) உள்ளூராட்சி மன்ற வரி 01%;*
*(3) ஏலதாரரின் தரகுப் பணம் 2.5%;*
*(4) விற்பனை நிபந்தனை உறுதிப்படுத்துவதற்கான நொத்தாரிசுக் கட்டணம் ரூபா2500.00;*
*(5) இலிகிதர் மற்றும் கூவுவோர் கட்டணம் ;*
*(6) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள்.*

*மிகுதி 90% வீதத்தையும், இலங்கை அரசாங்கத்தினலோ அல்லது வேறு அதிகார சபையினாலோ விதிக்கப்படும் சட்டரீதியான வரி அல்லது கட்டணங்கள் ஏதுமிருப்பின் அவற்றோடு , ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் செலான் வங்கி பீ.எல்.சீ. தாபனத்திற்கு செலுத்துதல் வேண்டும். மேற் குறிப்பிட்டவாறு மிகுதிப் பணம் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் செலுத்தப்படாதவிடத்து, செலுத்திய பணத்தை திருப்பித் தராமலிருப்பதற்கும் அதே காணியை மறு ஏல விற்பனை செய்வதற்கும் வங்கிக்கு அதிகாரம் உண்டு.*

*உரித்துறுதி, ஏனைய ஆவணங்கள் மற்றும் விபரங்களைப் பெற்றுக்கொள்ள "உதவி பொது முகாமையாளர், (சட்டம்), 14 ஆவது மாடி, செலான் வங்கி பீஎல்சீ, இல.90, காலி வீதி, கொழும்பு 3" என்ற விலாசத்தில் பார்வையிடவும் பெற்றுக்கொள்ளவும் முடியும். தொலைபேசி இல. 011-2456479 மற்றும் 011-2456473.*

*மேலேயுள்ள ஏல விற்பனையை எதுவித முன்னறிவித்தலுமின்றி நிறுத்துவதற்கோ அல்லது இரத்துச் செய்வதற்கோ உரிய சகல அதிகாரங்களும் வங்கிக்குண்டு.*

*சந்திமா பிரியதர்ஷினீ கமகே,*
*நீதிமன்ற ஆணையாளர், விலை மதிப்பீட்டாளர்*
*மற்றும் உரிமம் பெற்ற ஏலதாரர் .*

*இல. 9-i ஹைலெவல் வீதி , சர்வோதய மாவத்தை,*
*பனாகொட, ஹோமாகம.*
*தொலைபேசி: 071-4318252, 011- 2173282.*

*1- 214*

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ - மட்டக்களப்பு கிளை**
**பகிரங்க ஏல விற்பனை**

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 9 ஆம் பிரிவின் கீழ் பகிரங்க ஏல விற்பனை*

***ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ பணிப்பாளர் சபையின் தீர்மானத்தின் பிரகாரம் எனக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களின் கீழ் வாஸ்ஹரன் டிரேடர்ஸ் இன் பங்காளிகளான ஆறுமுகம் தங்கராஸ் மற்றும் தங்கராஸ் புஷ்பலதா ஆகியோர் கடப்பாடுடையவர்களாக வழங்கப்பட்ட கடன் வசதிகளுக்காக ஹற்றன் நஷனல் வங்கி பீஎல்சீ இற்கு ஈடுவைக்கப்பட்ட கீழ் விபரிக்கப்படும் ஆதனங்கள் அமைந்துள்ள அதே இடத்தில் என்னால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும்.***

***1 ஆம் விற்பனை***

*2022.02.18 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு*

***ஆதனத்தின் விபரம்.*-** *கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட வட்டார இல. 08, பஸார் 4 ஆம் குறுக்குத் தெருவில் அமைந்துள்ள வரிப்பண இல.15 எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர்* R. *பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1239*A *ஆம் இலக்க 2001.02.13ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 இன் மீளளவை உரிமம் பெற்ற நில அளவையாளர்* R. *பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2012.02.20ஆந் திகதிய 2225 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட*

லொட் A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 6 பேர்ச் பரப்பளவானது.

(இவ்வாதனம் வரிப்பண இல.15, 4 ஆம் குறுக்குத் தெரு, திருகோணமலை என இனங்காணலாம்).

**2ஆம் விற்பனை**

2022.02.18 ஆந் திகதி மு.ப.11.30 மணிக்கு

**ஆதனத்தின் விபரம்.-**

கிழக்கு மாகாணம், திருகோணமலை மாவட்டம், திருகோணமலை நகர சபை மற்றும் கடவத் பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் திருகோணமலை நகர சபை எல்லைக்குட்பட்ட பெருந்திரு வட்டார இல. 07 பிரதான வீதியில் அமைந்துள்ள வரிப்பண இல. 212 எனும் காணி உரிமம் பெற்ற நிலஅளவையாளர் R. பொன்னுசாமி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1409 ஆம் இலக்க 2002.05.03 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 இன் மீளளவை உரிமம் பெற்ற நிலஅளவையாளர் K. ஆறுமுகம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1799 A ஆம் இலக்க 2015.12.30 ஆந் திகதிய வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் இருமாடி வியாபாரக் கட்டிடமும் சகல உரிமைகளும் ஆகும். இது 8.10பேர்ச் (0.02050 ஹெக்டேயார் ) பரப்பளவானது.

( இவ்வாதனம் திருகோணமலை பிரதான வீதியில் வரிப்பண இல. 212 என இனங்காணலாம்).

**3 ஆம் விற்பனை**

2022.02.17 ஆந் திகதி மு.ப. 11.00 மணிக்கு

**ஆதனத்தின் விபரம்.-**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், அம்பகமுவ கோரளை பிரதேச செயலாளர் பிரிவு மற்றும் ஹற்றன் டிக்கோயா நகர சபை எல்லைக்குட்பட்ட இல. 319D ஹற்றன் தெற்கு கிராம அலுவலர் பிரிவில் ஹற்றனில் அமைந்துள்ள வரிப்பண இல. 19/079 புருட்ஹில் எனும் காணி உரிமம் பெற்ற நில அளவையாளர் L.U.D.Y. விஜேவர்தன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987.01.14 ஆந் திகதிய 3240 ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 13 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டின் மீளளவை உரிமம் பெற்ற நில அளவையாளர் சுமங்கலை சுப்பரமணியம் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2752A ஆம் இலக்க வரைபடத்தில் குறிக்கப்பட்ட பிரித்தெடுக்கப்பட்ட லொட் 1 என அடையாளமிடப்பட்ட காணித்துண்டும் அதனுள்ளடங்கும் கட்டிடங்களும் மற்றும் சகலதுமாகும். இது 9.75 பேர்ச் பரப்பளவானது.

**ஆதனத்தை வந்தடைதல்.-** ஹற்றன் நகர மத்தியிலிருந்து திம்புல்லை பாதையில் சுமார் 1.5 கிலோமீற்றர் தூரம் அவிஸ்ஸ சாவலை - நுவரெலியா A7 பாதை வரை வந்து இடது பக்கமாகவுள்ள புருட் ஹில் இற்கு பிரவேசிக்கும் பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்று இடது பக்கமாகத் திரும்பி ஆரியகம வீட்டுக் கட்டிடத்தொகுதி பாதைக்குள் பிரவேசித்து அப்பாதையில் சுமார் 200 மீற்றர் தூரம் சென்றால் இப்பாதையின் வலது பக்கத்தில் இவ்வாதனம் அமைந்துள்ளது.

**தீர்மானம் பற்றிய அறிவித்தலுக்கு.-** 2019.08.02 ஆந் திகதிய அரசாங்க வர்த்தமானியையும் 2019.08.19 ஆந் திகதிய "மவ்பிம", "டேலி மிரர் " மற்றும் "தினக்குரல் " ஆகிய பத்திரிகைகளையும் பார்க்கவும்.

**கொடுப்பனவு முறை.-** விற்பனை தீர்க்கப்பட்டவுடன் கொள்முதல் செய்தவரினால் கீழ்க் காணும் விதத்தில் கொடுப்பனவுகள் ரொக்கப்பணமாக செலுத்துதல் வேண்டும்:-

(1) கொள்முதல் விலையில் 10% (நூற்றுக்கு பத்து) ;
(2) பிரதேச சபை வரி 1% (நூற்றுக்கு ஒன்று) ;
